# அம்மா உடற்பயிற்சிக் கூடம்

- அரசாணை (நிலை) எண்.133 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள்.02.11.2016ன்படி தமிழ்நாடு முழுவம் 500 கிராம ஊராட்சிகளில் அம்மா உடற்பயிற்சிக் கூடங்கள் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.
- அதில் சேலம் மாவட்டத்தில் 25 எண்ணிக்கையிலான அம்மா உடற்பயிற்சிக் கூடங்கள் அமைக்கவும், ஒரு அம்மா உடற்பயிற்சிக் கூடம் அமைக்க 10,00,000/-க்கு மிகாமல் செலவினம் மேற்கொள்ளவும், 25 அம்மா உடற்பயிற்சிக் கூடங்கள் அமைக்க மொத்தம் 2,50,00,000/- க்கு ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.
- இதற்கான நிதி ஒதுக்கீடு மாநில நிதிக்குழு மான்யத்திலிருந்து 50 விழுக்காடும், உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதியிலிருந்து 50 விழுக்காடு தொகையும் ஒதுக்கீடு செய்யப்படும் என அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மேற்காணும் அரசாணையின் படி அம்மா உடற்பயிற்சிக் கூடங்களை தேர்வு செய்ய கீழ்காணும் விவரப்படி குழு அமைக்க ஆணையிடப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சித் தலைவர் | தலைவர் |
| 2 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சேலம் | உறுப்பினர் செயலர் |
| 3 | செயற்பொறியாளர் (ஊ.வ.), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, | உறுப்பினர் |
| 4 | மாவட்ட விளையாட்டு அலுவலர், சேலம் | உறுப்பினர் |
| 5 | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), சேலம் | உறுப்பினர் |

- மேற்காணும் குழு உறுப்பினர்களால் 25 எண்ணிக்கையிலான அம்மா உடற்பயிற்சி கூடம் அமைக்கும் பணியிடத்தை தேர்வு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு பணியாணை வழங்கப்பட்டு பணிகள் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.
- அம்மா உடற்பயிற்சிக் கூடம் அம்மா பூங்காவின் உட்புறத்தில் அமைக்கப்பட வேண்டும்.
- அம்மா உடற்பயிற்சிக் கூடத்தில் Leg Press -2, Air walker /Leg & Thigh Exerciser – 2, Shoulder Builder – 2, Hip Twister – 2, Double spin – 2, Exercise cycle – 1, Multi Gym – 1, Weight lifting rods with plates – 1, Dumbbell with

stand – 1, 6 Station Multi Gym – 1, Twister (standing and sitting) – 1, Orbitrek Trainer -1, Abdominal conditioner -1 and Butterfly -1 ஆகிய உபகரணங்களை நிறுவ வேண்டும். இதற்கான செலவினத் தொகை . 4,21,000/- ஆகும்.

- மீதம் உள்ள தொகை . 5,79,000/-ஐ கூடாரம் (Shed with colour coated galvanized sheet roof, flooring with kottastone , colour painting and doors etc.,)அமைக்கப்பட வேண்டும்.
- அம்மா உடற்பயிற்சி கூடம் 1161 சதுர அடியில் அமைக்கப்பட வேண்டும்.
- மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் (Tender Inviting authority) ஆவார். மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருந்தலைவர் அவர்கள் ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் (Tender Accepting Authority) அலுவலர் ஆவார்.
- இப்பணிகளுக்கு மாவட்ட அளவில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்படும், திட்ட இயக்குநர் மற்றும் செயற்பொறியாளர் ஆகியோர் மாவட்ட அளவிலும், சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) வட்டார அளவிலும் பணிகளை மேற்பார்வை செய்து, செயல்பாடுகளை கண்காணிக்கப்பட வேண்டும்.
- அம்மா உடற்பயிற்சிகூடத்தை சம்மந்தப்பட்ட ஊராட்சியால் பராமரிப்பு செய்யப்பட வேண்டும்.

பணிகள்விபரம்

| **வ. எண்** | **பணியின் விபரம்** | **பணிகளின் எண்ணிக்கை** | **தொகை (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| 1 | அம்மா உடற்பயிற்சி கூடம் | 25 | 250.94 |